**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093645

1. District மாவட்டம் : நாமக்கல்  PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு  Year ஆண்டு: 2020  FIR No. மு.த.அ. எண்: 05/AC/2020  Date நாள்: 29.10.2020

2. (i) Act சட்டம்: The P.C.Act-1988 as amended  Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: by the Prevention of corruption  Sections பிரிவுகள்: 7, 13(2) r/w 13(1)(a)
(iii) Act சட்டம்: (Amendment) Act-2018.  Sections பிரிவுகள்: r/w 12
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 28.10.2020  Date to நாள் வரை :
Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் : மாலை 16.45 மணிக்கு பின்பு  Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.10.2020  Time நேரம் : காலை 11.30 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume - IV 29.10.2020  Time நேரம் : காலை 11.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய்மொழியாக~~ திடீர் தணிக்கையின் போது கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 55 கி.மீ மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address முகவரி : ஆணையாளர் அலுவலகம் பள்ளிபாளையம் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.தி. ஜெய்குமார்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அ. தியாகராஜன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.06.1973  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91 நாள் 29.10.2020-ன் மேல் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.10.2020 பகல் 13.30 மணிக்கு

Name: பெயர் ........ அ.தி. ஜெய்குமார்
Rank: நிலை ....................No. எண் ........
காவல் துணை கண்காணிப்பாளர்
உ.கு.த. பிரிவு, நாமக்கல்.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.05/AC/2020. u/s. 7 and 13(2) r/w. 13(1) (a) r/w. 12 of the Prevention of Corruption Act. 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act. 2018 வழக்கின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,

எதிரிகளின் பட்டியல்

1) திரு.M.இளவரசன் (வயது-54) த/பெ.வி.மனோகரன், நகராட்சி ஆணையாளர், நகராட்சி அலுவலகம், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம். (குடியிருப்பு: கதவு எண்.47/9G4, சர்மா காலனி தெரு, விருதுநகர் மாவட்டம்)

2) திரு.T.அருள்முருகன் (வயது-29), த/பெ.திருச்செங்கன், இளநிலை உதவியாளர், நகராட்சி அலுவலகம், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம். (குடியிருப்பு: கதவு எண்.27/6, சரவணா நகர், ஆலாம்பாளையம் கிழக்கு, புளியங்காடு, புதுப்பாளையம் அக்ரஹாரம், பள்ளிபாளையம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்)

3) திரு.C.ராமன் (வயது:55/2020), த/பெ.R.சின்னபையன், அலுவலக உதவியாளர், நகராட்சி அலுவலகம், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம். (குடியிருப்பு: K.S. நகர், சமயசங்கிலி கிராமம், பள்ளிபாளையம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்).

4) திருமதி.S.புவனேஸ்வரி (வயது-30), க/பெ.செந்திலாதிபன், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர், ஆதார் சேவை மையம், நகராட்சி அலுவலகம், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம். (குடியிருப்பு: கதவு எண்.111, இராஜாஜி நகர், காவேரி சு.ளு. அஞ்சல், பள்ளிபாளையம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்).

5) திருமதி.R.தேவி (வயது-26), க/பெ.ரமேஷ், பரப்புரையாளர், தூய்மை இந்தியா திட்டம், நகராட்சி அலுவலகம், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம். (குடியிருப்பு: கதவு எண்.66, முனியப்பன் கோவில் தெரு, ஆவாரங்காடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்).

6) திரு.M.டேனியல் (வயது-27), த/பெ.மதியழகன், கதவு எண்.1/698, KPL நகர், காடச்சநல்லூர்-அஞ்சல், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். (தனியார்)

7) திரு.R.அருண்குமார், இளநிலை உதவியாளர்/காசாளர், நகராட்சி அலுவலகம், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம்.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். **05/AC/2020, u/s. 7 and 13(2) r/w. 13(1) (a) r/w. 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:

\- - -

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 28.10.2020-ஆம் தேதி புதன்கிழமை மாலை 16.50 மணி முதல் 29.10.2020-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 08.00 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் செய்த திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 29.10.2020-ஆம் தேதி காலை 11.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.**05/AC/2020, u/s. 7 and 13(2) r/w. 13(1) (a) r/w. 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில், நகராட்சி ஆணையாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் வீட்டுவரி, தொழில்வரி, சொத்துவரி ஆகியவை வசூலித்தல், புதிய வீடுகள் மற்றும் புதிய வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குதல், அனுமதியற்ற கட்டிடங்களுக்கு புதிய அனுமதி வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், ஆதார் இ-சேவை மைய பணியாளர்கள் மூலமாகவும் அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் 28.10.2020-ம் தேதி கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் நான் திடீர் தணிக்கை மேற்கொள்ள திரு.R.சந்திரமௌலீஸ்வரன், ஆய்வுக்குழு ஆய்வாளர்-I, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அறை எண்.127 மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், சேலம் அவர்கள் மற்றும் அரசு சாட்சியாக விசாரணைக்கு உதவியாக இருக்க திருச்செங்கோடு வட்டாட்சியர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து, திரு.R.சரவணகுமார், மண்டல துணை வட்டாட்சியர் எண்-1, வட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவரை திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம்

அருகில் காத்திருக்குமாறு தொலைபேசியில் அறிவுறுத்திய பின்னர் 28.10.2020-ஆம் தேதி பிற்பகல் சுமார் 15.00 மணிக்கு நான் ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் குழுவுடன் **TN 21 G 0641** பதிவெண் கொண்ட அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் மாலை சுமார் 16.00 மணிக்கு சென்றடைந்தேன். அங்கு காத்திருந்த திரு.R.சரவணகுமார் அவர்களை நான் அரசு வாகனத்தில் அழைத்துக் கொண்டு பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.45 மணிக்கு சென்றேன். பள்ளிபாளையம் **To** சங்ககிரி பைபாஸ் செல்லும் தென்வடல் சாலையில் உள்ள பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ளே நுழைந்தபோது அலுவலக ஹாலுக்கு தெற்கு பக்கம் வடக்கு பார்த்தவாறு உள்ள நகராட்சி ஆணையாளர் அறையில் கிழக்கு நோக்கி நகராட்சி ஆணையாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் நான், என்னையும், என்னுடன் வந்திருந்த ஆய்வுக்குழு ஆய்வாளர், அரசு சாட்சி மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டேன். பின்னர் நான் அவரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.ம.இளவரசன் என்றும், நகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். நான் குழுவினருடன் நகராட்சி ஆணையாளரிடம் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, மேற்படி அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அப்போது நகராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் மேலாளர் திரு.**A**.ஜாஹீர், இளநிலை உதவியாளர்கள் திரு.**R**.அசோக் மற்றும் திரு.**T**.அருள்முருகன், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திரு.**P**.ராஜகுமரன், ஓட்டுநர் திரு.**M**.குப்புசாமி, பொருத்துநர் திரு.**P**.சந்திரசேகரன், தனியார் ஒப்பந்த பணியாளர் திரு.**S**.சதீஷ், ஒப்பந்த ஓட்டுநர் திரு.**P**.ஆனந்தகுமார், மின் பணியாளர் திரு.**N**.**G**.பாலாஜி, சமுதாய அமைப்பாளர் திரு.**M**.வளர்செல்வன் அலுவலக உதவியாளர் திரு.**K**.ராஜ்மதிவாணன் மற்றும் துப்புறவு பணியாளர் திரு.**C**.ராமன் ஆகிய அலுவலர்கள் அலுவலகத்தில் பணியில் இருந்தனர். மேலும் சுகாதார ஆய்வாளர் அறையில் சுகாதார ஆய்வாளர் திரு.**C**.நகுல்சாமி என்பவர் பணியில்

இருந்தார். மேலும் அலுவலகத்தில் தற்காலிக பணியாளர் கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திருமதி.R.B.தேன்மொழி, தற்காலிக தட்டச்சர்கள் திருமதி.M.தீபா மற்றும் திருமதி.P.கோமதி ஆகியோர்களும் பணியில் இருந்தனர். பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர் திரு.P.சரவணன், பணி மேற்பார்வையாளர் திரு.K.சரவணன், தனியர் திரு.M.டேனியல், தற்காலிக டைப்பிஸ்ட் செல்வி.S.மௌனிகா, குழாய் திருகுநர் திரு.M.செல்வம் ஆகியோர்களும், கணினி வரிவசூல் மையத்தில் வருவாய் உதவியாளர் திரு.S.உமாநாத், ஒப்பந்த பணியாளர்/பரப்புரையாளர்கள் திருமதி.R.தேவி மற்றும் திரு.E.கோகுல்ராஜ், தனியார் ஒப்பந்த துப்புறவு பணியாளர் திரு.G.சிலம்பரசன் ஆகியோர்களும் பணியில் இருந்தனர். அச்சமயம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள ஆதார் இ-சேவை மைய அலுவலகத்தின் வெளியே வந்த இரண்டு பெண்களை அழைத்து விசாரித்த போது அவர்கள் தங்களது பெயர் திருமதி.S.புவனேஸ்வரி மற்றும் திருமதி.S.ஜெயசித்ரா என்றும், அவர்கள் எல்காட் பணியாளர்கள் என்றும் தெரிவித்தனர். அவர்கள் அலுவலகத்திற்குள் வரவழைக்கப்பட்டனர். அப்போது அலுவலகத்திற்கு வந்திருந்த பொதுமக்கள் சிலரும் அலுவலகத்திற்குள் இருந்தனர். பொதுமக்களிடம் விசாரணை செய்தபோது அவர்கள் இன்று தங்கள் சொந்த வேலை சம்மந்தமாக அலுவலகம் வந்துள்ளதாக தெரிவித்தனர். பின்னர் பொதுமக்களை விசாரித்து வெளியில் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி அனைத்து அலுவலர்களையும், தனியர்களையும் அவர்கள் இருக்கையிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு காவலர்களை கொண்டு காப்பு பணி நியமிக்கப்பட்டது. பின்னர் நான் அரசு சாட்சிகள் உதவியுடன் நகராட்சி ஆணையாளரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டேன். அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் ஆணையாளர் திரு.M.இளவரசன் அவர்களை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவர் அணிந்திருந்த பேண்டின் இடது பக்க வெளிப்பாக்கெட்டில் இரண்டு மடிப்பாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்புடன் ரூ.465/- (Rs.100 X 4, Rs.10 X 6, Rs.5 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம்

ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.465/-ஐ அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு மடிப்புடன் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்த போது மொத்தம் ரூ.6,300/- (Rs.500 X 9, Rs.200 X 2, Rs.100 X 14) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.6,300/-ஐ சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் நகராட்சி ஆணையாளரிடம் அலுவலர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேடு ஏதும் உள்ளதா என்று விசாரித்தபோது, அவ்வாறான பதிவேடு அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். பின்னர் நகராட்சி ஆணையாளரின் அறை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டேன். அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் ஆணையாளரிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டபோது, ஆணையாளர் அவர்கள் திரு.T.அருள்முருகன் என்பவரை அழைத்து 2019-ம் ஆண்டின் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற கொடிநாள் இலக்கின் விபரத்தின் நகலை கேட்டு பெற்று 2019 வருடத்திற்கு கொடிநாள் நிதி வசூல் இலக்கு ரூ.2,20,000/- என்றும், அதில் 21.09.2020-ஆம் தேதி வரை மொத்தம் ரூ.53,000/- வசூல் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறி மேற்படி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் Proc.No 3300/2019/A3, Date: 24.10.2019 மற்றும் அலுவலக கடிதம் ந.க.எண்.107/2019/சி1, நாள்: 21.09.2020 ஆகியவற்றின் நகல்களை ஆஜர் செய்தார். அதை நானும், அரசு சாட்சிகளும் பார்வையிட்டு விசாரணையின் பொருட்டு ஆணையாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு சென்று அலுவலக ஹாலில் இருந்த சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.K.ராஜ் மதிவாணன் என்றும், தான் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க வெளிப்பாக்கெட்டில் மடிப்புடன்

வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.600/- **(Rs.500 X 1, Rs.100 X 1)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.600/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.C.ராமன் என்றும், தான் துப்புறவு பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவர் அணிந்திருந்த சட்டையின் இடது பக்க மேல்வெளிப்பாக்கெட்டில் இரண்டு மடிப்பாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.30/- **(Rs.10 X 3)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.30/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு மடிப்புடன் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்த போது மொத்தம் ரூ.1,450/- **(Rs.500 X 2, Rs.200 X 2, Rs.50 X 1)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் எந்த விளக்கமும் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.1,450/-ஐ சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். மற்றொரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.A.சுந்தரம் என்றும், தான் ஜெய் ஸ்ரீராம் (அமைப்பு சாரா) தொழிலாளர் நலவாரிய சங்க மாவட்ட தலைவர் என்றும், தான் அதிரடி குரல் என்ற பெயரில் மாத இதழ் நடத்தி வருவதாகவும், அந்த மாத இதழை ஆணையாளர் அவர்களிடம் கொடுக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பின்பாக்கெட்டில் மணிபர்சில் மடிப்பாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.4,220/- **(Rs.500 X 2, Rs.200 X 2, Rs.100 X 25, Rs.50 X 2, Rs.20 X 9, Rs.10 X 4)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.4,220/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.S.புவனேஸ்வரி

என்றும், தான் எல்காட் நிறுவனத்தின் சார்பாக ஆதார் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கில் முதல் அறையில் இருந்த PKM ஜீவல்லரி, கரூர் என்ற முகவரியிட்ட மணிபர்சில் மூன்று மடிப்புகளுடன் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.8,400/- (Rs.500 X 5, Rs.200 X 19, Rs.100 X 21) இருந்தது. மற்றொரு மடிப்பில் ரூ.2,600/- (Rs.500 X 2, Rs.200 X 4, Rs.100 X 8) இருந்தது. மேலும் மற்றொரு மடிப்பில் ரூ.12,100/- (Rs.2000 X 6, Rs.100 X 1) இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி தொகை ஆக மொத்தம் ரூ.23,100/-ஐ சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கில் மூன்றாவது அறையில் இருந்த இரண்டு மடிப்புகளுடன் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.360/- (Rs.100 X 3, Rs.20 X 3) இருந்தது. மற்றொரு மடிப்பில் ரூ.290/- (Rs.100 X 2, Rs.10 X 9) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.360/- மற்றும் ரூ.290/-ஐ அவரிடம் திரும்ப கொடுத்தேன். மேலும் அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கில் மூன்றாவது அறையில் இருந்த RK JEWELLSS என்ற முகவரியிட்ட மணிபர்சில் இரண்டு மடிப்புகளுடன் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.15,000/- (Rs.2000 X 1, Rs.500 X 15, Rs.200 X 7, Rs.100 X 38, Rs.50 X 6) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.15,000/-ஐ சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். மற்றொரு மடிப்பில் ரூ.1,300/- (Rs.500 X 2, Rs.100 X 3) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் இன்றைய தினம் ஆதார் சம்மந்தமாக பொதுமக்கள் செலுத்திய கட்டணத்தொகை ரூ.1,300/- என்றும், அது சம்மந்தமாக இன்றைய தினம் கம்ப்யூட்டரில் விபரம் உள்ளது என்று

சொன்னார். நான் அவ்விபரத்தை நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கணினியில் நகல் எடுத்து வரச்சொன்னேன். மேற்படி கட்டணத்தொகை செலுத்திய விபரங்களை திருமதி.S.புவனேஸ்வரி அவர்கள் கணினியில் நகல் எடுத்து வந்து ஆஜர் செய்தார். அதில் திருமதி.S.புவனேஸ்வரி அவர்களிடம் கையொப்பம் பெற்று, அதை பார்வையிட்டதற்கு அடையாளமாக அதில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து கைப்பற்றிக் கொண்டேன். மற்றொரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.S.ஜெயச்சித்ரா என்றும், தான் எல்காட் நிறுவனத்தின் மூலம் ஆதார் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கில் முதல் அறையில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.1250/- (Rs.500 X 2, Rs.100 X 2, Rs.50 X 1) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, டேட்டா என்ட்ரி சம்மந்தமாக பொதுமக்கள் செலுத்திய கட்டணத் தொகை என்றும், அதை அரசு கணக்கில் நாளை செலுத்த வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.1,250/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் ஹேண்ட்பேக்கில் இரண்டாவது அறையில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.30/- (Rs.10 X 3) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.30/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அப்போது அலுவலகத்திற்குள் நுழைந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.M.செல்வம் என்றும், தான் குழாய் திருகுநராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.500/- (Rs.100 X 5) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.500/- அவரிடம் திரும்ப

கொடுக்கப்பட்டது. பின்னர் நான் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலக ஹாலின் மேற்குப்புறம் உள்ள நிர்வாகப்பிரிவிற்கு சென்றேன். அங்கு முன்புறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.R.அசோக் என்றும், தான் இளநிலை உதவியாளர் என்றும், E-1 இருக்கையை கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.160/- (Rs.100 X 1, Rs.10 X 6) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.160/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து E-1 இருக்கைக்கு தென்புறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.T.அருள்முருகன் என்றும், தான் இளநிலை உதவியாளர் என்றும், H-1 இருக்கையை கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை இரண்டு மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.140/- (Rs.100 X 1, Rs.10 X 4) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.160/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு மடிப்பில் ரூ.6,000/- (Rs.2000 X 1, Rs.500 X 8) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.6,000/- சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். அதனைத் தொடர்ந்து H-1 இருக்கைக்கு தென்புறம் வடக்கு

பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.A.ஜாஹீர் என்றும், தான் மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.490/- (Rs.100 X 3, Rs.50 X 1, Rs.20 X 3, Rs.10 X 8) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.490/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து E-1 இருக்கைக்கு எதிர்புறம் கிழக்கு பார்த்தவாறு கம்ப்யூட்டர் டேபிளின் முன்புறம் அமர்ந்திருந்த பெண்ணிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.M.தீபா என்றும், தற்காலிக டைப்பிஸ்ட்-ஆக நகராட்சி ஆணையாளர் திரு.இளவரசன் அவர்களின் உத்தரவின்பேரில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் Accountant திரு.ராமச்சந்திரன் அவர்களுக்கு உதவியாக பில் போடும் அலுவல் செய்து வருவதாகவும், Account Section-ல் 1) அலுவலர்களுக்கான Provident Fund Register, T-Deposit 2019-2020 மற்றும் 2020-2021, 2) Lapsed Deposit Register, Code No.1801101, Volume-II, 3) Deposit Register 2020-2021, Code No.3408001 (4020), 4) Other Deposit Register 2020-2021, Code No.3408001 (4020) மற்றும் 5) Deposit Register 2020-2021, Code No.3401002 (4017), Code No.3401003 (4018) ஆகிய பதிவேடுகளை பராமரித்து எழுதி வருவதாகவும், அதற்காக தனக்கு Engineering Section-இல் வருகைப்பதிவேடு பராமரிக்கிறார்கள் என்றும் சொன்னார். மேற்படி பதிவேடுகளை நகராட்சி ஆணையாளர் மூலம் திருமதி.தீபா என்பவரை எடுத்துவரச் செய்து, அதை பார்வையிட்டு, நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, சம்மந்தப்பட்ட பக்கங்களின் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு, தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவர் தனக்கு மாத சம்பளம் ரூ.9,000/-ம் என்றும், அவருக்கு மாத சம்பளத்தை காண்ட்ராக்டர்

திரு.யுவராஜ் அவர்களிடம் பெற்று பணி மேற்பார்வையாளர் திரு.சரவணன் அவர்கள் பணமாக தருவார்கள் என்றும் தெரிவித்தார். மேலும் தன்னைப்போல் பொறியாளர் பிரிவில் மௌனிகா என்பவரும் டைப்பிஸ்டாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது ஹேண்ட்பேக்கில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.350/- (Rs.100 X 3, Rs.50 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.350/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. அவரைத் தொடர்ந்து அடுத்ததாக வடக்குபுறம் கிழக்கு பார்த்தவாறு கம்ப்யூட்டர் டேபிளின் முன்புறம் அமர்ந்திருந்த பெண்ணிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் செல்வி.P.கோமதி என்றும், தான் தற்காலிகமாக டைப்பிஸ்ட்-ஆக நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்பேரில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவருக்கு மாதம் ரூ.8,710/- ஊதியமாக காசோலை மூலம் ஆணையாளர் வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது ஹேண்ட்பேக்கில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.510/- (Rs.100 X 5, Rs.10 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.510/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் தகவல் தெரிவித்து அங்கு வரவழைக்கப்பட்ட மௌனிகா என்பவர் தன் பெயர் செல்வி.S.மௌனிகா த/பெ.செங்கோட்டுவேல் என்றும், தான் நகராட்சி அலுவலகத்தில் பொறியாளர் பிரிவில் தற்காலிக டைப்பிஸ்ட்டாக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரிடம் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. மேலும் அவரிடம் விசாரிக்க, அவர் தான் Engineering Section இல் பராமரிக்கப்படும்

பதிவேடுகளான தினசரி குடிநீர் மற்றும் குளோரின் அளவு சரிபார்த்தல் பதிவேடு **2020-2021, Over Head Tank Cleaning Register 2015-2016** முதல் உள்ள பதிவேடு ஆகியவற்றை **Fitter** திரு.சந்திரசேகரன் அவர்களுடன் சேர்ந்து விபரங்களை பதிவு செய்து பராமரித்து வருவதாகவும், மேலும் **Engineering** பிரிவில் **UIDSSMT Scheme Internal Plumping** கோப்புகளை தான் எழுதி பராமரிப்பதாகவும், தனக்கு மாதம் ரூ.9,000/- சம்பளத்தை **Contractor** திரு.யுவராஜ் அவர்கள் கொடுப்பார்கள் என்றும், அவர் தனது சம்பளத்தை சில சமயங்களில் **Overseer** திரு.சரவணன் அவர்களிடமும் கொடுத்துவிட்டு செல்வார் என்றும் தெரிவித்தார். மேலும் குழாய் திருகுனர் திரு.M.செல்வம் அவர்களால் பராமரிக்கப்படும் பைப் லைன் வேலை பார்ப்பவர்கள் வருகைப்பதிவேட்டில் தனது வருகை மற்றும் தன்னை போல் வேலை பார்க்கும் திருமதி.தீபா ஆகியோர்களின் வருகையை பதிவு செய்து கொள்வார்கள் என்று தெரிவித்தார். மேற்படி தினசரி குடிநீர் மற்றும் குளோரின் அளவு சரிபார்த்தல் பதிவேடு **2020-2021, Over Head Tank Cleaning Register 2015-2016** முதல் உள்ள பதிவேடு மற்றும் பைப் லைன் வேலை பார்ப்பவர்கள் வருகைப்பதிவேடு ஆகியவற்றை நகராட்சி ஆணையாளர் மூலம் செல்வி.மௌனிகா அவர்களை எடுத்துவரச் செய்து, அதை பார்வையிட்டு, நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, சம்மந்தப்பட்ட பக்கங்களின் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு, தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். அதனைத் தொடர்ந்து **E-1** இருக்கைக்கு கிழக்குபுறம் ஒரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.M.குப்புசாமி என்றும், தான் நகராட்சி ஆணையாளரின் டிரைவராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் அமர்ந்திருந்த இருக்கை பதிவறை எழுத்தருடையது என்றும், இன்று மதியத்திற்கு மேல் அவர் தபால் கொடுப்பதற்காக ஈரோடு சென்றுவிட்டார் என்றும் சொன்னார். மேலும் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.600/- **(Rs.50 X 8, Rs.20 X 5, Rs.10 X 10)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் தனக்கு மாத்திரை வாங்குவதற்காக கொண்டு

வந்த சொந்த பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.600/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அந்த அறையின் வடக்குப்பக்கம் தெற்கு பார்த்தவாறு இருந்த பதிவறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அந்த அறையின் மேற்குப்பக்கம் வடக்கு பார்த்தவாறு இருந்த மற்றொரு பதிவறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு ஆணையாளர் அறைக்கு வடக்குப்பக்கம் உள்ள அலுவலக ஹாலுக்கு வந்தேன். அந்த ஹாலின் வடபுறம் கிழக்கு பார்த்தவாறு ஒரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.P.சந்திரசேகரன் என்றும், தான் பொருத்துநராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.200/- (Rs.100 X 2) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.200/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி திரு.P.சந்திரசேகரன் அருகில் வடபுறம் கிழக்கு பார்த்தவாறு ஒரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.S.சதீஷ் என்றும், தான் தனியார் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.50/- (Rs.10 X 5) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.50/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு நான் அலுவலக ஹாலுக்கு

முன்புறம் உள்ள வரவேற்பறைக்கு சென்றேன். அங்கு வடக்கு பக்கம் கிழக்கு பார்த்தவாறு ஒரு சேரில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.P.ஆனந்தகுமார் என்றும், தான் ஒப்பந்த அடிப்படையில் நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், தான் மாத ஊதியமாக ரூ.10,500/- பெற்று வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.20/- (Rs.10 X 2) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.20/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அதே அறையில் அவருக்கு வடக்குப் பக்கம் கிழக்கு பார்த்தவாறு ஒரு சேரில் அமர்ந்திருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.N.G.பாலாஜி என்றும், தான் எலக்ட்ரீசியனாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.10/- (Rs.10 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.10/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அப்போது அலுவலகத்திற்குள் நுழைந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.P.செங்கோட்டையன் என்றும், தான் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.30/- (Rs.10 X 3) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.30/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலக ஹாலின்

வடக்குப்பக்கம் தெற்குப் பார்த்தவாறு அமைந்துள்ள நகர ஊரமைப்பு அலுவலக அறைக்கு செல்லப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு வெளியில் வரவேற்பறைக்கு வந்து தெற்குப்புறம் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள பில் கலெக்டர் அறைக்கு செல்லப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் நான், அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு நுழையும் வழியில் தெற்குப்புறம் வடக்கு பார்த்தவாறு உள்ள சுகாதார ஆய்வாளர் அறைக்கு சென்றேன். அந்த அறையின் தெற்குப்பக்கம் வடக்கு பார்த்தவாறு உள்ள டேபிளின் முன்பு அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.C.நகுல்சாமி என்றும், தான் நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர் அவரின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. அதனைத் தொடர்ந்து சுகாதார ஆய்வாளர் இருக்கைக்கு முன்பு வடபுறம் கிழக்கு பார்த்தவாறு கம்ப்யூட்டர் டேபிளின் முன் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.R.B.தேன்மொழி என்றும், தான் தற்காலிக பணியாளர் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், பணியில் சேர்ந்தது முதல் பிறப்பு சான்று வழங்கும் பதிவேடு மற்றும் இறப்பு சான்று வழங்கும் பதிவேடு ஆகியவற்றை எழுதி பராமரித்து வருகிறேன் என்றும், தற்போது தான் மாத சம்பளமாக ரூ.10,000/- பெற்று வருவதாகவும், தனது சம்பளத்தை சுகாதார ஆய்வாளர் திரு.நகுல்சாமி அவர்கள் மாதம் மாதம் வழங்குவார்கள் என்றும் தெரிவித்தார். மேற்படி பிறப்பு சான்று வழங்கும் பதிவேடு மற்றும் இறப்பு சான்று வழங்கும் பதிவேடு 2020 ஆகியவற்றை நகராட்சி ஆணையாளர் மூலம் திருமதி.R.B.தேன்மொழி அவர்களை எடுத்துவரச் செய்து, அதை பார்வையிட்டு, நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, சம்மந்தப்பட்ட பக்கங்களின் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் சான்றொப்பம்

பெறப்பட்டு, தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது மேஜையின் மீது இருந்த ஹேண்ட்பேக்கில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.220/- (Rs.100 X 2, Rs.20 X 1,) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.220/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் நான், அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு நுழையும் வழியில் உள்ள சுகாதார ஆய்வாளர் அறைக்கு மேற்குப்புறம் வடக்கு பார்த்தவாறு உள்ள கணினி வரிவசூல் மையத்திற்கு சென்றேன். அந்த வரிவசூல் மையத்தின் முகப்பில் கேஷ் கவுண்டர் அருகில் நின்று கொண்டிருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.E.கோகுல்ராஜ் என்றும், தான் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பரப்புரையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.46/- (Rs.10 X 4, Rs.2X3) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.46/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அந்த வரிவசூல் மையத்தின் முகப்பில் கேஷ் கவுண்டர் அருகில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.G.சிலம்பரசன் என்றும், தான் தனியார் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.85/- (Rs.10 X 8, Rs.5 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு

வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.85/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அறையின் மேற்குப்புறம் கேஷ் கவுண்டர் அறைக்கு செல்லும் வழியில் உள்ள கண்ணாடியால் தடுக்கப்பட்ட அறையில் வடக்கு பார்த்தவாறு இருந்த கம்ப்யூட்டர் டேபிளின் முன் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.P.ராஜகுமரன் என்றும், தான் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.30/- **(Rs.10 X 3)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.30/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அந்த அறையில் இரண்டு மேஜைகள் காலியாக இருந்தது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் கணினி வரிவசூல் செய்யும் கேஷ் கவுண்டர் அறைக்கு செல்லப்பட்டது. கண்ணாடியால் தடுக்கப்பட்ட அந்த அறையில் மேற்குப்பக்கம் கிழக்கு பார்த்தவாறு இருந்த கம்ப்யூட்டர் டேபிளின் முன் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.S.உமாநாத் என்றும், தான் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.220/- **(Rs.100 X 2, Rs.10 X 2)** இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.220/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் மேற்குப்பக்கம் வடக்கு பார்த்தவாறு இருந்த கம்ப்யூட்டர் டேபிளின் முன் அமர்ந்திருந்த பெண்ணிடம்

விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.R.தேவி என்றும், தான் நவம்பர் 2017-முதல் திருச்சியை சேர்ந்த New Life Placement என்ற நிறுவனத்தின் மூலம் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளராக பள்ளிபாளையம் நகராட்சியில் களப்பணி செய்து வருகிறேன் என்றும், மேலும் என்னுடன் நான்கு பரப்புரையாளர்கள் மற்றும் ஒரு மேற்பார்வையாளர் இந்த திட்டத்தில் பணிபுரிகிறார்கள் என்றும், தான் New Life Placement நிறுவனத்திலிருந்து பிடித்தம் போக ரூ.8,600/- மாத சம்பளமாக பெற்று வருகிறேன் என்றும், நான் மகப்பேறு விடுப்பு முடிந்து கடந்த 01.06.2020-இல் மீண்டும் பணியில் சேர்ந்து களப்பணி செய்து வந்தேன் என்றும், கடந்த 03.06.2020-ஆம் தேதி நகராட்சி ஆணையாளர் அவர்கள் தன்னை Cash Counter-இல் பணி செய்யச் சொன்னதாக சொல்லி Cashier திரு.அருண்குமார் என்பவர் நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் அழைத்து வந்தார் என்றும், நகராட்சி ஆணையாளர் அவர்கள் Cashier திரு.அருண்குமார் அவர்களை "C1" இருக்கை பொறுப்பை கவனிக்கவும் என்னை Cashier பணியை கவனிக்கவும் அறிவுறுத்தினார் என்றும், நான் Cashier பொறுப்பை பெற்றுக்கொண்ட 03.06.2020-ஆம் தேதி முதலே மொத்த வசூல் பணத்தில் ரூ.7,968/- குறைவாக இருந்தது என்றும், தான் அது பற்றி திரு.அருண்குமார் அவர்களிடம் கேட்டபோது, ஒவ்வொரு நாளும் வசூல் பணத்தை அடுத்தநாள் வங்கியில் செலுத்தும்போது காலையில் வசூல் ஆகும் தொகையை கொண்டு பற்றாக்குறை தொகையை சரிசெய்து முழுமையாக வங்கியில் செலுத்திவிடுங்கள் என்று சொன்னார் என்றும், அதனால் தானும் இதுநாள் வரை அவ்வாறே செலுத்தி வருகிறேன் என்றும் தெரிவித்தார். அவரிடம் 28.10.2020-ம் தேதி நகராட்சி அலுவலகத்தில் வசூல் செய்யப்பட்ட தொகை விபரம் பற்றி கேட்டபோது அவர் கணினியில் இருந்து வசூல் விபரம் கொண்ட BRV Abstract எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் கீழ்கண்ட தலைப்புகளில் 1) Water Supply Revenue Fund - Rs.85,498, 2) Water Supply Deposit - Rs.8,993/-, 3) Elementary Education Fund - Rs.16,155/-, 4) Library Cess - Rs.7,130/-, 5) Revenue Fund - Rs.37,765/-, 6) Amma Unavu - Rs.2,600/-, 7) Revenue Fund SUC Corp - Rs.37,028/- ஆக மொத்தம் ரூ.1,95,169/- வசூல் செய்யப்பட்டுள்ளது. பின் பணப் பெட்டியை எடுத்து ஆஜர்

செய்தார். அதை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்கையில் ரூ.1,87,201/- இருந்தது. மேற்படி Abstract-படி வசூல் செய்யப்பட்ட தொகையில் பணம் ரூ.7,968/- பற்றாகுறையாக இருந்தது. அது குறித்து நகராட்சி ஆணையாளரிடம் விளக்கம் கேட்டபோது, அதற்கு அவர் பணம் பற்றாக்குறையாக உள்ளதற்கு காசாளரும், அலுவலக மேலாளரும் முழுப்பொறுப்பு என்றார். இது குறித்து அலுவலக மேலாளரிடம் கேட்டபோது, அவர் தனக்கும், காசாளருக்கும், நகராட்சி ஆணையாளருக்கும் பணம் பற்றாக்குறையாக இருப்பதற்கு பொறுப்பு உள்ளது என்று தெரிவித்தார். மேற்படி விபரங்கள் அடங்கிய கணினி நகல்களை நகராட்சி ஆணையாளர் மூலம் திருமதி.தேவி அவர்களை எடுத்துவரச் செய்து, அதில் கையிருப்பில் உள்ள தொகை விபரங்கள் திருமதி.தேவி அவர்களால் எழுதப்பட்டு, அவரின் கையொப்பம் பெறப்பட்டு, அதில் நகராட்சி அலுவலக மேலாளர் திரு.ஜாஹீர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கையொப்பங்கள் பெறப்பட்டு, அதை பார்வையிட்டு நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, மேற்படி தொகை ரூ.1,87,201/-ஐ நகராட்சி ஆணையாளர் வசம் ஒப்புவிக்கப்பட்டு அவரிடமும், அலுவலக மேலாளர் திரு.ஜாஹீர் அவர்களிடமும் ஒப்புதல் கையொப்பங்கள் பெறப்பட்டு, தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் திருமதி.தேவி அவர்களை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது ஹேண்ட்பேக்கில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.240/- (Rs.100 X 2, Rs.10 X 4) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.240/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு அலுவலக நுழைவாயிலுக்கு இடது புறமாக உள்ள வழியில் சென்று தெற்கு பக்கமாக உள்ள நகராட்சி பொறியாளர் அறைக்கு செல்லப்பட்டது. அப்போது அந்த அறையில் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் P.சரவணன் என்றும், தான் நகராட்சியில் பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும்

தெரிவித்தார். பின்னர் அந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரு.430/- (Rs.100 X 4, Rs.10 X 3) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரு.430/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக்கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. அதனை தொடர்ந்து நான், அரசு சாட்சிகளையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்துக் கொண்டு நகராட்சி பொறியாளர் அறைக்கு மேற்புறம் உள்ள பொறியியல் பிரிவு அறைக்கு சென்றேன். அந்த அறையின் வடமேற்கு மூலையில் கிழக்கு பார்த்தவாறு உள்ள டேபிளின் முன் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க தன் பெயர் M.டேனியல் த/பெ.மதியழகன், கதவு எண்.1/698 கே.பி.எல். நகர், காடச்சநல்லூர்-அஞ்சல், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும், தான் பள்ளிபாளையம் நகராட்சியில் கட்டிட வரைபட வரைவாளராக கடந்த 2 வருடத்திற்கு முன்பு பதிவு செய்துள்ளதாகவும், நகராட்சி பொறியியல் பிரிவில் ஏதேனும் வரைபட வேலை இருப்பின் தன்னை அழைத்து அந்த பணியை செய்து கொடுக்கச் சொல்வார்கள் என்றும், 28.10.2020-ம் தேதி வரைபட வேலை இருப்பதாக தன்னை வரச்சொன்னதின் பேரில் மதியம் Engineering Section வந்து கணினியில் பள்ளிபாளையம் நகராட்சி, ஆவரங்காடு, அங்கன்வாடி அருகில் வார்டு எண்.16-இல் வணிக வளாகம் கட்டிடம் கட்ட Proposal அனுப்புவதற்கான வரைபட பணியை செய்து கொண்டிருந்ததாக தெரிவித்தார். நகராட்சி ஆணையாளர் மூலம் அந்த வரைபடத்தின் கணினி நகல் எடுக்கப்பட்டு, அதை பார்வையிட்டு, நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, திரு.டேனியல் அவர்களிடம் கையொப்பம் பெற்று, தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல்

வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.10/- (Rs.10 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.10/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது பேண்டின் வலது பக்க முன் பாக்கட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் பணம் ரூ.2,500/- (Rs.500 X 3, Rs.200 X 5) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.2,500/- சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அந்த அறையின் தென்மேற்கு மூலையில் வடக்கு பார்த்தவாறு உள்ள டேபிளின் முன் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க தன் பெயர் K.சரவணன் என்றும், தான் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரிடம் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அந்த அறையில் வடகிழக்கே தெற்கு பார்த்தவாறு உள்ள டேபிளின் முன் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, தன் பெயர் M.வளர்செல்வன் என்றும், தான் சமுதாய அமைப்பாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அதில் கைப்பற்றக் கூடிய வகையில் பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து இரண்டு மடிப்புகளுடன் ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.740/- (Rs.100 X 7, Rs.10 X 4) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.740/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அந்த அறையின் வடமேற்கு மூலையில் திரு.டேனியல் அமர்ந்திருந்த டேபிளின்

தெற்குப்புறம் தரையில் இருந்த ஹேண்ட்பேக் சோதனையிடப்பட்டது. அந்த ஹேண்ட்பேக்கின் முதல் அறையில் மடிப்புடன் பணம் இருந்தது. அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்க்கையில் ரூ.570/- (Rs.200 X 2, Rs.50 X 3, Rs.10 X 2) இருந்தது. அந்த ஹேண்ட் பேக்கை பற்றி விசாரித்தபோது அது பிட்டராக பணிபுரியும் திரு.P.சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமானது என்று தெரிவித்தனர். அதனால் மேற்படி பணம் ரூ.570/- சந்தேகத்தின்பேரில் அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றிக் கொண்டேன். இந்த திடீர் தணிக்கையின்போது கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

1) நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு உள் பணியாளர்களின் வருகை பதிவேடு-01.01.2020 முதல் உள்ளது.
2) நகராட்சி அலுவலக வருவாய்பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு ஆகிய பணியாளர்களின் வருகை பதிவேடு-2020.
3) நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு பணியாளர்களின் வருகை பதிவேடு-01.01.2020 முதல் உள்ளது.
4) நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி நகரமைப்பு பிரிவு அனுமதி பெறாத கட்டுமான பதிவேடு-2020.

மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அதன் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு, நகராட்சி ஆணையாளர் திரு.இளவரசன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். மேற்படி பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகமானது பள்ளிபாளையம் To சங்ககிரி செல்லும் தென்வடல் பைபாஸ் சாலையில் மேற்குபுறம் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ள அரசு சொந்தமான கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அலுவலகத்தின் நுழைவாயில் செல்லும் வழியில் தெற்குபுறம் வடக்கு பார்த்தவாறு சுகாதார ஆய்வாளர் அறை சுமார் 16X10 அடி அளவில் உள்ளது. அதன் மேற்புறம் கணிணி வரி வசூல் மையம் சுமார் 16X16 அடி அளவில் வடக்கு பார்த்தவாறு உள்ளது. அதன் மேற்புறம் வடக்கு பார்த்தவாறு இ-சேவை மையம் சுமார் 16X6 அடி அளவில்

உள்ளது. அதன் தென் மேற்புறம் ஆதார் சேவை மையம் சுமார் 8X8 அடி அளவில் வடக்கு பார்த்தவாறு உள்ளது. பிறகு ஆதார் சேவை மையத்திற்கு மேற்புறம் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகளும், அதன் மேற்புறம் கழிவறையும் உள்ளது. அதன் மேற்புறம் வடக்கு பார்த்தவாறு நகராட்சி பொறியாளர் அறை சுமார் 16X10 அடி அளவில் உள்ளது. அதன் மேற்புறம் பொறியியல் பிரிவு அறை சுமார் 16X16 அடி அளவில் வடக்கு பார்த்தவாறு உள்ளது. அந்த அறையின் மேற்புறம் கழிவறை அமைந்துள்ளது. நகராட்சி அலுவலகத்தின் போர்டிகோ சுமார் 20X20 அடி அளவில் உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் போர்ட்டிகோவின் மேற்கு புறம் கிழக்கு பார்த்தவாறு சுமார் 11X11 அடி அளவில் வரவேற்பு அறை உள்ளது. வரவேற்பு அறையின் தெற்குபுறம் வடக்கு பார்த்தவாறு சுமார் 11X11 அடி அளவில் பில்கலெக்டர் அறை உள்ளது. மேற்படி வரவேற்பு அறையின் மேற்புறம் கிழக்கு பார்த்தவாறு சுமார் 16X11 அடி அளவில் அலுவலக ஹால் உள்ளது. அலுவலக ஹாலுக்கு தெற்கு புறம் வடக்கு பார்த்தவாறு சுமார் 20X12 அடி அளவில் நகராட்சி ஆணையாளர் அறை உள்ளது. மேற்படி ஹாலிற்கு மேற்புறம் நிர்வாக பிரிவு அறை கிழக்கு பார்த்தவாறு சுமார் 20X16 அடி அளவில் உள்ளது. மேற்படி நிர்வாக பிரிவு அறைக்கு மேற்புறம் வடக்கு பார்த்தவாறு சுமார் 16X4 அடி அளவில் பதிவறை உள்ளது. மேற்படி பதிவறைக்கு எதிர் புறம் தெற்கு பார்த்தவாறு கழிவறை உள்ளது. மேற்படி நிர்வாக பிரிவு அறையின் வடக்குபுறம் தெற்கு பார்த்தவாறு சுமார் 12X10 அடி என்ற அளவில் பதிவறை உள்ளது. மேற்படி அலுவலக ஹாலுக்கு வடக்கு புறம் தெற்கு பார்த்தவாறு சுமார் 10X7 அடி அளவில் நகரமைப்பு அலுவலர் அறை உள்ளது. இந்த திடீர் தணிக்கை 29.10.2020-ம் தேதி காலை 08.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். மேலும் தமிழக அரசின் உத்திரவுபடி கோவிட்-19 கொரோனா நோய் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட்டது. மேலும் அலுவலக உடைமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் நாமக்கல் மாவட்ட ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல சொல்ல தலைமை காவலர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/தனியர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அலுவலர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த கணக்கில் வராத தொகைகள் முறையற்ற வழியிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் தனியர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற வழிகளில் அலுவலர்களால் தனியர்களிடமிருந்து பிரதிபலனாக பெறப்படக்கூடிய பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், மேலும் அலுவலர்கள் மற்றும் தனியர்கள் ஒருவரை ஒருவர் குற்றச் செயல் செய்ய தூண்டி, முறையற்ற வழிகளில் சுயலாபம் அடைய வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு, அரசுப் பணத்தை கையாடல் செய்துள்ளனர் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால் இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று, மேற்படி எதிரிகள் மீது இன்று 29.10.2020-ம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.05/AC/2020, u/s. 7 and 13(2) r/w. 13(1) (a) r/w. 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

29.10.2020

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.